TMB Tamilnad Mercantile Bank Ltd

Be a step ahead in life

பதிவு அலுவலகம் :
57,V.E. ரோடு, தூத்துக்குடி-628002
மின்னஞ்சல் : shareholders@tmbank.in

CIN: U65110TN1921PLC001908

94வது முதல் 97வது வரையிலான ஆண்டு பொதுக் கூட்டத்திற்கான அறிவிப்பு

தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி உறுப்பினர் / பங்குதாரர்களுக்கான 2015 -16 முதல் 2018 -19 வரையான 4 ஆண்டுகளுக்கான ஆண்டுப்பொதுக் கூட்டங்கள் - அதாவது 94, 95, 96 மற்றும் 97வது ஆண்டுப் பொதுக் கூட்டங்கள் 2020ம் ஆண்டு, அக்டோபர் மாதம் 28ம் தேதி புதன்கிழமையன்று முறையே காலை 10 மணி, 10.30 மணி, 11 மணி மற்றும் 11.30 மணிக்குத் தொடங்கி, இறுதிக் கூட்டம் முடிவடையும் வரை நடைபெறும் என இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுகிறது. மேற்கண்ட கூட்டங்கள் காணொலிக் காட்சி வழியாகவோ வேறு ஒலி காட்சிகள் வழியாகவோ நடத்தப்படும். ஆண்டுப் பொதுக் கூட்டம் நடத்துவது குறித்து 9.3.2020ம் தேதி அனுப்பப்பட்ட அறிவிப்பு மற்றும் நிறுவனச் சட்டம் 2013ன் 102வது பிரிவின்படி அனுப்பப்பட்ட விரிவான விளக்கத்தின்படி அதில் கூறப்பட்ட அலுவல்கள் கூட்டத்தில் பரிவர்த்தனை செய்யப்படும். இந்த ஆண்டுப் பொதுக் கூட்டங்கள் கடந்த 06.02.2020 அன்று மெட்ராஸ் உயர்நீதிமன்றம் W.A. 2/2016 & CMP Nos. 10145, 16385, 16388, 16389 மற்றும் 16419/2019 - WP. No. 23056/2019 மற்றும் WMP 22748, 22751/2019 ஆகிய வழக்கில் வழங்கிய ஆணை மற்றும் 16.09.2020 அன்று C.M.P. எண் 7089 மற்றும் 7094/2020 இன் W.A. No. 2/2016 ன் கீழ் வழங்கிய ஆணை ஆகியவற்றின் பேரில் நடத்தப்படுகிறது. மேலும் மெட்ராஸ் உயர்நீதிமன்றம் 06.02.2020 அன்று வெளியிட்ட ஆணையின்படி 2016 முதல் 2019ம் ஆண்டுக்கானதாக கருதப்படும் இந்த நிறுவனத்தின் 94வது முதல் 97வது ஆண்டுகளுக்கான பொதுக்கூட்டத்தை மெட்ராஸ் உயர்நீதி மன்றத்தின் முன்னாள் நீதியரசர் திரு. ஆர். பாலசுப்ரமணியன் அவர்களின் தலைமையில் நடத்தவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆணையின் தொடர்ச்சியாக மெட்ராஸ் உயர்நீதிமன்றம் 16.09.2020 அன்று வெளியிட்ட உத்தரவின்படி, 94வது முதல் 97 வது வரையிலான ஆண்டு பொதுக்கூட்டத்தை உத்திரவு பெறப்பட்ட நாளில் இருந்து 45 நாட்களுக்குள் நடத்தவும். அதில் இயக்குனர்கள் நியமனம் தொடர்பான விருப்ப விண்ணப்பங்களைப் பெறும் நிலையில் இருந்து தொடங்கவும், கூட்டங்களை காணொலி காட்சி மூலமாகவோ, வேறு ஒலி காட்சிகள் வழியாகவோ அமைத்திடவும், இந்திய அரசின் நிறுவன விவகாரங்களுக்கான அமைச்சகம் வெளியிட்டுள்ள சுற்றறிக்கை மற்றும் வழிகாட்டு நெறிகளுக்கு உட்பட்டு செய்யவும் அனுமதி அளித்துள்ளது.

குறிப்புகள் :

1. உங்களது வங்கி (தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி) தனது 94வது முதல் 97வது வரையிலான ஆண்டு பொதுக் கூட்டத்தை நடப்பாண்டில், கடந்த ஏப்ரல் 9ம் தேதி அன்று தூத்துக்குடியில் நடத்துவது தொடர்பாக, 2020 பிப்ரவரி 24ம் தேதி வெளியிட்ட அறிவிப்பை அடுத்தும் அதன் தொடர்ச்சியாகவும் இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது. உலகம் முழுவதும் பரவி, தற்போது பொதுமக்களை வாட்டும் கோவிட் 19 பெருந்தொற்று பரவலையொட்டி, இந்திய அரசால் அறிவிக்கப்பட்ட நாடு தழுவிய ஊரடங்கால், திட்டமிட்டபடி 2020ம் ஆண்டு, ஏப்ரல் 9ம் தேதியன்று 94வது முதல் 97வது வரையிலான ஆண்டுப் பொதுக் கூட்டத்தை நடத்த இயலாமல் போனது. அதையொட்டி, அந்த ஆண்டிற்கான பொதுக் கூட்டங்கள் தள்ளிவைக்கப்பட்டதுடன், அது குறித்து பத்திரிகைகளில் பொது அறிவிப்பும் வெளியிடப்பட்டது.

2. கோவிட் 19 பெருந்தொற்று பரவலையொட்டி, தற்போது சமூக இடைவெளியைக் கடைபிடிக்க வேண்டிய கட்டாயமுள்ளது. இதையொட்டி, ஆண்டுப் பொதுக் கூட்டங்களை காணொளிக் காட்சி மூலமாகவோ.. வேறு ஒலி காட்சிகள் வழியாகவோ நடத்திக் கொள்ளவும், உறுப்பினர்கள் நேரில் வர வேண்டும் என்ற அவசியம் இல்லை எனவும் இந்திய அரசின் நிறுவன விவகாரங்களுக்கான துறை அனுமதி அளித்துள்ளது. மேலும், மேற்கண்ட இந்த அமைச்சகத்தின் - 2020ம் ஆண்டு ஏப்ரல் 8ம் தேதியிட்ட சுற்றறிக்கை எண் 14/2020, 2020ம் ஆண்டு ஏப்ரல் 13ம் தேதியிட்ட சுற்றறிக்கை எண் 17/2020, 2020ம் ஆண்டு மே 5ம் தேதியிட்ட சுற்றறிக்கை எண் 20/2020 போன்றவை ஆண்டுப் பொதுக் கூட்டத்தை காணொளி காட்சி உள்ளிட்ட பிற வகையில் எப்படி நடத்துவது என்பது குறித்த வழிமுறைகளைத் தெரிவித்துள்ளன. அவற்றின்படியே 94வது முதல் 97வது வரையிலான ஆண்டுப் பொதுக் கூட்டங்கள் காணொளி காட்சி உள்ளிட்ட பிற வகையிலேயே நடத்தப்படும். எனவே, உறுப்பினர்கள் இந்த கூட்டத்தில் அவ்வழிகளிலேயே பங்கேற்கலாம். ஏற்கனவே இவ்வாண்டு பிப்ரவரி 24ம் தேதி வெளியான அறிவிப்பில் இடம்பெற்ற உத்தேசத் தீர்மானங்கள் இவ்வங்கி பங்குதாரர்கள் அனைவருக்கும் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளது. அந்த தீர்மான விவரங்கள் இந்தக் கூட்டத்திற்கும் பொருந்தும். கூட்டம் நடத்தப்படும் முறை மட்டுமே காணொளி காட்சி உள்ளிட்ட பிற வகைக்கு மாற்றப்பட்டுள்ளன.

3. தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியின் 94வது முதல் 97வது வரையிலான ஆண்டுப் பொதுக் கூட்டம் காணொளி காட்சி உள்ளிட்ட பிற வகையில் நடத்தப்படுவதால், குறிப்பிட்ட பொது இடத்தில் உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுகூட வேண்டும் என்ற அவசியமில்லை. 94வது முதல் 97வது வரையிலான ஆண்டு பொதுக் கூட்டங்கள் நடைபெறவுள்ள இடம் இவ்வங்கியின் பதிவு அலுவலக முகவரியான எண் 57, வி.இ.சாலை, தூத்துக்குடி - 628002 என்ற இடத்தில்தான் எனவும் கருதலாம்.

4. நிறுவனச் சட்டம் 2013ன் பிரிவு 101ன் கீழ் வரும், நிறுவனங்களின் நிர்வாகம் மற்றும் மேலாண்மை தொடர்பாக 2014ம் ஆண்டு வெளியான விதி எண் 18ன்படியும், ஆண்டுப்பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்கான வழக்கமான நடைமுறைகள் போன்றவற்றின்படி, 2015-16, 2016-17, 2017-18, 2018-19 ஆகிய நிதியாண்டுகளுக்கான ஆண்டறிக்கை மற்றும் ஆண்டுப் பொதுக் கூட்டம் நடத்துவதற்கான அறிவிப்பு போன்றவை மின்னஞ்சல் வடிவில் 2020 மார்ச் 9ம் தேதியன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும், தங்களது முகவரியை வங்கி நிர்வாகத்திடம் பதிவு செய்துள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் மேற்சொன்ன நான்கு ஆண்டுகளின் ஆண்டறிக்கை மற்றும் ஆண்டு பொதுக் கூட்டத்திற்கான அறிவிப்பு போன்றவற்றின் நகல் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. இதுதவிர, மேற்கண்ட ஆவணங்கள் இவ்வங்கியின் வலைதளத்தில் https://www.tmb.in/annual-general-meetings.aspx என்ற முகவரியுள்ள பக்கத்திலும் இடம்பெற்றுள்ளது.

மேலே சொன்ன ஆண்டறிக்கைகள் மற்றும் அறிவிப்புகள் கிடைக்கப் பெறாத உறுப்பினர்கள் அவற்றை https://www.tmb.in/annual-general-meetings.aspx என்ற வலைதள முகவரியில் இருந்து பதிவு இறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது கூட்டம் நடைபெற உள்ள தினத்திற்கு 7 நாட்கள் முன்னதாக கோரிக்கை வைத்தால், மேற்கண்ட ஆவணங்கள் நீங்கள் பதிவு செய்துள்ள மின்னஞ்சல் முகவரிக்கும் / நகல்கள் தபால் மூலமும் அனுப்பி வைக்கப்படும்.

நடக்க உள்ள ஆண்டுப் பொதுக்கூட்டங்களில் நிறைவேற்ற உள்ள தீர்மானங்கள், மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள், அலுவல்கள் குறித்த விவரங்கள் ஆண்டுப் பொதுக் கூட்ட அறிவிப்பு மூலம் ஏற்கனவே உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் இடம்பெற்றுள்ள அலுவல்கள் அனைத்துமே முக்கியமானவை மற்றும் தவிர்க்க இயலாதவை. தற்போதைய சூழலில் இவ்வங்கி மேற்கொள்ள வேண்டிய, அத்தியாவசிய நடவடிக்கைகளில் பெரும்பாலானவற்றை ஏற்கனவே இது நிறைவேற்றிவிட்டதால், ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்கான தேதியை முடிவுசெய்வது போன்றவைதான் பாக்கி இருந்தன. அதோடு, நிறுவனச் சட்டம் 2013ன்படி, கடந்த புத்தக முடிப்பு நாள் (BOOK CLOSURE DATE) ஆன 03.03.2020க்குப் பிறகு புதிதாக இணைந்த உறுப்பினர்களுக்கு மின்னணு வாக்குப்பதிவு செய்ய தேவையான அனுமதி வழங்குவது தொடர்பான காரியங்களை மேற்கொள்வதுடன், இயக்குனர் பதவிக்கு போட்டியிட விரும்புபவர்கள் மனுதாக்கல் செய்ய போதுமான கால அவகாசத்தைத் தர வேண்டிய பணிகள் மட்டுமே பாக்கி உள்ளன.

நடைபெற உள்ள இவ்வங்கிக்கான இயக்குனர் தேர்தலில் மின்னணு வாக்குப் பதிவு முறையில் வாக்களிக்க உதவியாக ஒவ்வொரு உறுப்பினருக்கும் அவர்கள் பயன்படுத்த வேண்டிய பயனாளி பெயர் (USER ID) மற்றும் கடவு சொல் (PASSWORD) போன்றவற்றை டெப்பாசிட்டரி பங்கேற்பாளரான சிடிஎஸ்எல் (CDSL) ஏற்கனவே அனுப்பியுள்ளது. தங்கள் மின்னஞ்சல் முகவரியை வங்கியிடமோ, டிபியிடமோ இதுவரை பதிவு செய்யாத மற்றவர்களுக்கும் மின்னணு முறையில் வாக்களிக்க தேவைப்படும் ரகசிய தகவல் எண் (PIN Mailer) பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. அவ்விதம், ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ள கடவுசொல் மற்றும் அந்த ரகசிய எண்கள் தற்போது நடக்க உள்ள ஆண்டு பொதுக்கூட்டத்தையொட்டிய மின்னணு வாக்குப் பதிவுக்கும் பொருந்தும். எனவே, இந்தக் கடவுச் சொல் மற்றும் ரகசிய எண்கள் மீண்டும் ஒருமுறை புதியதாக அனுப்பப்படமாட்டாது. ஏற்கனவே தங்களுக்கு வந்துள்ள அதே கடவுச்சொல் மற்றும் ரகசிய எண்களை இந்தமுறை வாக்களிக்கும்போது பயன்படுத்தவும். எனினும், **சிடிஎஸ்எல் அனுப்பிய பயனாளி பெயர் மற்றும் கடவுச் சொல்லால் மட்டுமே உறுப்பினர்கள் வாக்களிக்க இயலும் என்பது கவனிக்கத்தக்கது.**

5. மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் 06.02.2020 தேதியிட்ட ஆணையின்படி, இவ்வங்கிக்கான இயக்குனர் தேர்தல் தொடர்பான விவரங்கள், தற்போது நடைபெற உள்ள 4 ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் இறுதியாக நடைபெற உள்ள 97வது ஆண்டுப் பொதுக் கூட்டத்தின்போதுதான் எடுத்துக் கொள்ளப்படும். இயக்குனர் தேர்தலில் பங்கேற்க உள்ளவர்கள் குறித்த அறிவிப்பு பத்திரிகைச் செய்தி மூலம் வங்கிப் பங்குதாரர்களுக்கு தெரிவிக்கப்படும். இயக்குனர் தேர்தலில் பங்கேற்க விரும்பும் நபர்கள் குறித்த தகவல்களை கூட்டம் நடக்க உள்ள தேதிக்கு குறைந்தது 14 நாட்கள் முன்னதாக முன்மொழிந்து பதிவு செய்து கொள்ள வேண்டும் எனவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. மேலும் இயக்குனர் தேர்தலில் போட்டியிட விரும்பும் நபர்கள் 2004ம் ஆண்டு ஜுன் 25ம் தேதியன்று இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்ட சுற்றறிக்கை DBOD.No. BC. 104/08. 139.001 / 2003-04ன் படி தகுதியானவராகவும், நேர்த்தியுள்ளவராகவும் (Fit & Proper) இருத்தல் வேண்டும். அதோடு அந்த நபர் இயக்குனர் குழுவில் இடம்பெற தகுதியானவர்தானா என்பதை சரிபார்க்க உதவும் வகையில் அதற்காக இந்திய ரிசர்வ் வங்கி 2020ம் ஆண்டு மார்ச் 31ம் தேதியன்று வெளியிடப்பட்டுள்ள உறுதிமொழி மற்றும் உத்தரவாத நகல் எண். DoR. Appt. No. 58/29.67.001/2019-20ன் படியான உறுதிமொழி ஏற்பு ஆவணத்தை முழுமையாக பூர்த்தி செய்து விண்ணப்பிக்கவேண்டும்.

இயக்குனர் தேர்தலில் போட்டியிட விண்ணப்பிக்கும் அனைவரும் நிறுவன சட்டம் 2013 பிரிவு 152 (5)ன் கீழ் (இயக்குனர்கள் நியமனம் மற்றும் தகுதிகள் தொடர்பான விதி 2014 கீழ்) தரப்பட்டுள்ள படிவம் DIR 2ன்படி தங்களது ஒப்புதலைத் தர வேண்டும். அதேபோல, நிறுவனச் சட்டம் 2013 பிரிவு 164(2)ன்படி, படிவம் DIR 8ஐப் பூர்த்தி செய்து தாங்கள் ஒரு நிறுவனத்தின் இயக்குனராக இருக்க தகுதியற்றவர் என, இதுவரை எந்த நிறுவனத்தாலும் அறிவிக்கப்படவில்லை என்பதை உறுதி செய்ய வேண்டும். மேற்கண்ட ஆவணங்களோடு, நிறுவன சட்டம் 2013 பிரிவு 160ன்படி தேவையான 1 லட்ச ரூபாய்க்கான வரைவோலையை (Demand Draft) வங்கியின் பதிவு அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். ஏற்கனவே இவ்விதமாக இயக்குனர் தேர்தலில் பங்கேற்க தங்களது விண்ணப்பங்களை அனுப்பியுள்ள நபர்கள் மீண்டும் புதியதாக விண்ணப்பிக்க வேண்டியதில்லை. எனினும், அவர்கள் தற்போதுள்ள திருத்தப்பட்ட உறுதிமொழி மற்றும் உத்தரவாத நகலைப் பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும். இதற்கான மாதிரி ஆவணம் இவ்வங்கியின் வலைதளத்தில் https://www.tmb.in/doc/Declaration-and-undertaking-by-a-proposed-Director.pdf. என்ற முகவரியில் இடம்பெற்றுள்ளது.

6. நடைபெற உள்ள இந்த வங்கியின் ஆண்டு பொதுக் கூட்டங்கள் - 2020ம் ஆண்டு மே 5ம் தேதியிட்ட நிறுவன விவகாரங்களுக்கான அமைச்சகத்தின் சுற்றறிக்கை எண் 20/2020ன்படி, காணொளி காட்சி உள்ளிட்ட வகையில் நடத்தப்பட உள்ளதால் உறுப்பினர்கள் நேரில் பங்கேற்க வேண்டும் என்ற கட்டாயம் எதுவுமில்லை. எனவே, இந்த ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் வழக்கமாக அனுமதிக்கப்படும் பதிலி வாக்களிக்கும் முறை (PROXY VOTING) மற்றும் நிறுவனச்சட்டப் பிரிவு 105ன்படி, பதிலி நியமன வசதி போன்றவை அனுமதிக்கப்படவில்லை. எனவே, இந்த 2020 ஆண்டு பிப்ரவரி மாதம் 24ம் தேதியிட்ட அறிக்கையில் நடக்க இருந்த ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பங்கேற்க ஏற்கனவே வழங்கப்பட்ட அறிவிப்பில் இடம்பெற்ற பதிலி நியமன அனுமதி மற்றும் பங்கேற்பு உறுதி ஆவணம் போன்றவை தற்போதைய சூழல்படி பயனற்றதாகிறது.

7. நடக்க உள்ள 94வது முதல் 97வது வரையிலான ஆண்டுப் பொதுக்கூட்டங்கள் காணொளி காட்சி உள்ளிட்ட பிற வகையில் நடைபெறுவதால், இந்த 2020 ஆண்டு பிப்ரவரி மாதம் 24ம் தேதியிட்ட அறிவிப்பில் இடம்பெறும் கூட்ட அரங்குக்கு வழிகாட்டும் வரைபடம் பயனற்றதாகிறது.

8. சென்ட்ரல் டெப்பாசிட்டரி சர்வீஸஸ் (இந்தியா) லிமிடெட் (CDSL) தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு, காணொலி மற்றும் பிற வகையில் ஆண்டு பொதுக்கூட்டத்தில் பங்கேற்கும் வசதி மற்றும் பொதுக்கூட்டம் நடைபெறும்பொழுது மின்னணு மூலம் வாக்குபதிவு செய்யும் வசதியை செய்துள்ளது.

9. 94வது முதல் 97வது வரையிலான ஆண்டுப் பொதுக் கூட்டம் காணொளி காட்சி உள்ளிட்ட பிற வகையில் நடைபெறுவதால் அதில் பங்கேற்பது தொடர்பான வழிமுறைகள் / ஆலோசனைகள் கீழே தரப்பட்டுள்ளன. அதோடு, கூட்ட நாளன்று 94வது ஆண்டுப் பொதுக்கூட்டம் தொடங்க உள்ள நேரத்திற்கு 30 நிமிடம் முன்னதாக இருந்தே - அதாவது காலை 9.30 மணியில் இருந்து காணொளி காட்சி மற்றும் வேறு ஒலி காட்சி மூலம் இணைவதற்கு உறுப்பினர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

10. காணொளி காட்சி உள்ளிட்ட பிற வகையில் நடக்க உள்ள 94வது முதல் 97வது வரையிலான ஆண்டுப் பொதுக் கூட்டங்களில் பங்கேற்பாளர் எண்ணிக்கை, முதலில் இணைப்பிற்கு வரும் குறைந்தபட்சம் 1000 உறுப்பினர்களுக்கு மட்டுமே அனுமதி என்பதை உறுப்பினர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம். வங்கியின் மொத்த பங்குகளில் 2%க்கு மேல் வைத்திருக்கும் நபர்கள், வங்கியைத் தொடங்கியவர்கள், நிறுவன முதலீட்டாளர்கள், இயக்குனர்கள், முக்கிய நிர்வாகிகள், ஆடிட் கமிட்டி, நாமினேஷன் மற்றும் ரெமுனரேஷன் கமிட்டி (Nomination and Remuneration Committee), ஸ்டேக்ஹோல்டர் ரிலேஷன்ஷிப் கமிட்டி (Stakeholders Relationship Committee) போன்றவற்றின் தலைவர்கள், சட்டப்பூர்வமாக நியமனம்பெற்ற பொது ஆடிட்டர்கள் போன்றோருக்கு ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பங்கேற்க நுழைவதற்கு வரம்புகள் எதுவுமில்லை.

11. காணொளி காட்சி மற்றும் வேறு ஒலி காட்சிகள் வழியாக இந்த ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் எத்தனை நபர்கள் பங்கேற்கிறார்கள் என்பது எண்ணப்படும். நிறுவனச் சட்டம் 103ன்படி, போதிய பங்கேற்பாளர்களின் அளவை அறிய (Quorum) இந்தத் தகவல் உபயோகப்படுத்தப்படும்.

12. நிறுவனத்தின் பெயரில் இந்த வங்கிப் பங்குகளை வாங்கி வைத்திருப்பவர் இந்த ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் காணொளிக் காட்சி உள்ளிட்ட பிற வகையில் பங்கேற்கவும், வாக்களிக்கவும் விரும்பினால் - நிறுவனச் சட்டம் 2013 பிரிவு 113ன்படி அந்த நிறுவனத்தின் சார்பில் யாராவது ஒரு நபரைத் தேர்வு செய்து, அவருக்கு இதற்கான அங்கீகாரம் / அனுமதி தருவதாக நிறுவனத்தின் நிர்வாகக் குழுவில் தீர்மானம் இயற்றி, அதை உரிய ஆவணங்களோடு வங்கியின் ஆண்டுப்பொதுக் கூட்டம் தொடங்குவதற்கு 48 மணி நேரம் முன்னதாக shareholders@tmbank.in அல்லது helpdesk.evoting@cdslindia.com என்ற மின்னஞ்சல் முகவரியில் தகவல் தெரிவிக்க வேண்டும்.

13. இந்த ஆண்டுப் பொதுக் கூட்டத்தின்போது உறுப்பினர்கள் விரும்பினால், நகலெடுக்கப்பட்ட (Scanned copy) இயக்குனர்கள் பதிவேட்டையும், முக்கிய நிர்வாகிகளின் பட்டியலையும் பார்வையிடலாம். அதோடு, நிறுவனச் சட்டம் 2013 பிரிவு 170ன்படி, தற்போது இந்த வங்கியின் பங்குகளை வைத்திருக்கும் நபர்களின் பட்டியல் மற்றும் அளவு குறித்த தகவலையும் பார்க்க அனுமதி உண்டு. அதோடு, நிறுவனச் சட்டம் 2013, பிரிவு 189ன்படி, வங்கி சார்பிலான ஒப்பந்தங்கள் மற்றும் வங்கியின் இயக்குனர்கள் கொண்டுள்ள தொடர்பு மற்றும் ஆர்வம் போன்றவை குறித்த தகவல் மட்டுமின்றி, ஆண்டுப் பொதுக்கூட்ட அறிவிப்பில் இடம்பெற்றுள்ள பிற ஆவணங்களையும் பார்வையிடலாம். இதற்கு சிடிஎஸ்எல் ஏற்பாடு செய்துள்ள மின்னணு வாக்களிக்கும் முறைக்கான வலைதளம் https:// www.evotingindia.com உதவும். அதில் நுழைந்து விரும்பிய ஆவணங்களைப் பார்வையிட முடியும்.

14. நிறுவனச் சட்டம் 2013, பிரிவு 108ன் கீழ், 2014ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட கம்பெனி நிர்வாகம் மற்றும் மேலாண்மை தொடர்பான விதி 20ன்படியும், அதில் பின்னர் செய்யப்பட்ட திருத்தங்களின்படியும் - இந்த வங்கி அதன் உறுப்பினர்களுக்கு - ஆண்டுப்பொதுக்கூட்டத்தில் கொண்டு வரப்படும் தீர்மானங்களின் மீது வாக்களிக்கும் உரிமையை வழங்குகிறது. அதன்படி, காணொளி காட்சி மூலம் இக்கூட்டத்தில் பங்கேற்கும் நேரத்திலேயே மின்னணு முறையில் வாக்களிக்கலாம் அல்லது காணொளி கூட்டத்தில் இருந்து வெளியேறி அல்லது காணொளி கூட்டத்தில் பங்குபெறாமலும் வெளியில் இருந்தபடி மின்னணு முறையில் (Remote e-voting) வாக்களிக்க செய்யப்பட்டுள்ள வசதியைப் பயன்படுத்தலாம்.

15. **இந்த ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் முன்வைக்கப்படும் தீர்மானங்களின் மீது வாக்களிக்க தகுதியான உறுப்பினர்கள் / பங்குதாரர்கள் தகுதி 21.10.2020ம் தேதியை அடிப்படையாக கொண்டு முடிவு செய்யப்படவுள்ளது. எனவே, அன்றைய தினத்தில் தங்களது பெயரில் பங்குகளைப் பெற்று அதற்கான பதிவேட்டில் இடம் பிடிக்கும் நபர்கள் மட்டுமே வாக்களிக்க முடியும். அவ்வாறு இடம் பிடிக்க இயலாத நபர்கள் வாக்களிக்க தகுதியற்றவர்களாவர். அத்தகையோர் இந்த ஆண்டு பொதுக்கூட்டம் குறித்த அறிவிப்பு உள்ளிட்ட பிற தகவலைப் பெற நேர்ந்தால், அது வெறும் தகவலாக மட்டுமே பார்க்கப்பட வேண்டும்.**

16. உறுப்பினர்கள் தொலைதூர மின்னணு வாக்கு (Remote e-voting) முறையில் எங்கிருந்து வேண்டுமானாலும் வாக்களிக்கலாம். **இந்த வாக்குப்பதிவு 25.10.2020 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குத் தொடங்கி, 27.10.2020 செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு நிறைவடையும்.** இதோடு, தொலைதூர மின்னணு வாக்குப் பதிவுமுறையில் வாக்களிக்க இயலாதவர்கள் மற்றும் தவறவிட்டவர்களுக்கு ஆண்டுப் பொதுக் கூட்ட நாளில் காணொளிக் காட்சி மூலம் கலந்து கொண்டு வாக்களிக்க வாய்ப்பு தரப்படும். (இதற்கு 22(D) ல் இடம் பெறும் தகவலைப் பார்க்குமாறு உறுப்பினர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்)

17. மின்னணு முறையில் நடைபெறும் இந்த ஒட்டுமொத்த வாக்களிப்பு முறையில் எந்தவிதமான குறையும் இல்லாமல் மிகச் சரியாக நடைபெறுவதை உறுதி செய்ய திரு நாகேந்திர டி ராவ் என்ற கம்பெனி செக்ரட்டரியை ஒரு மேற்பார்வையாளராக / சோதிப்பவராக (Scrutinizer) இந்த வங்கி நியமித்துள்ளது. மேலும், தொலைதூர மின்னணு வாக்களிப்பு முறை குறித்த விரிவான விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. எனவே அதைப் பார்த்து அறியும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள்.

18. மின்னணு வாக்குப் பதிவு முறைக்கு மேற்பார்வையாளராக / சோதிப்பவராக நியமிக்கப்பட்டவர் தான் மேற்கொண்ட ஆய்வின்படி, 97வது ஆண்டுப் பொதுக் கூட்டம் நிறைவுற்ற 48 மணி நேரத்தில் தனது அறிக்கையை பொதுக்கூட்டத்தின் தலைவருக்கு சமர்ப்பிப்பார். அதில் அவரது ஆய்வில் திரட்டிய முழுமையான தகவல்கள் இடம்பெற்றிருக்கும். அதாவது, ஒவ்வொரு தீர்மானத்துக்கும் ஆதரவான வாக்குகள், எதிரான வாக்குகள், செல்லாதவை, பதிவான வாக்குகள் போன்ற தகவலோடு, தீர்மானங்கள் ஒப்புதல் பெற்றனவா, இல்லையா என்ற விவரமும் இடம்பெற்றிருக்கும்.

19. மெட்ராஸ் உயர்நீதி மன்றத்தின் அறிவிப்பு மூலம் தீர்மானங்கள் குறித்த முடிவுகள் வெளியானபின் மேற்பார்வையாளர் / சோதிப்பாளர் அளித்த அறிக்கை https://www.tmb.in/annual-general-meetings.aspx எனும் வங்கியின் வலைதளப் பக்கத்தில் இடம்பெறும். அதோடு, சிடிஎஸ்எல்-ன் வலைதளத்தில் www.evotingindia.com என்ற பக்கத்திலும் இடம்பெறும்.

20. காணொளி காட்சி உள்ளிட்ட பிற வகையில் ஆண்டுப்பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வது குறித்து ஏதேனும் சந்தேகம் மற்றும் பிற உதவிக்கு கீழ்கண்ட மூன்று தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு பேசலாம். திரு. நிதின் குந்தர் (022-23058738), அல்லது திரு. மெஹ்பூப் லக்கானி (022-23058543), அல்லது திரு. ராகேஷ் தல்வி (022-23058542) இது தவிர, குறிப்பிட்ட கேள்விகள் சந்தேகங்கள் இருந்தால் அவற்றுக்கான விடைபெற 9566141888 என்ற கைப்பேசி எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.

21. சிடிஎஸ்எல் மூலம் பெறப்பட்ட பயனாளிப் பெயர் மற்றும் கடவுச் சொல் மூலமே தமிழ்நாடு மெர்க்கென்டைல் வங்கியின் தொலைதூர மின்னணு வாக்களிப்பு முறை அல்லது ஆண்டுப்பொதுக் கூட்டத்தில் நடக்கும் மின்னணு வாக்களிப்பு முறையில் பங்கேற்க முடியும்.

22. தொலை தூர மின்னணு வாக்களிப்பு முறை எவ்வாறு செயல்படுகிறது என்பதை இப்போது விரிவாகப் பார்க்கலாம்.

A : **சிடிஎஸ்எல்லிடமிருந்து பெறப்பட்ட மின்னஞ்சல் மூலம் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பங்கேற்பதற்கான பயனாளி பெயர் மற்றும் கடவு சொல் பெற்றிருந்தால்.. (நிறுவனத்திடமோ.. டிபியிடமோ... தங்களது மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்து கொண்டுள்ள உறுப்பினர்களுக்கு...)**

i. உறுப்பினர்கள் முதலில் மின்னணு முறையில் வாக்களிக்கும் வலைதளமான www.evotingindia.com என்ற முகவரிக்குள் நுழைய வேண்டும்.
ii. அதில் உறுப்பினர் / பங்குதாரர் என பொருள்படும் வகையில், SHAREHOLDERS / MEMBERS எனத் தரப்பட்டுள்ள வாய்ப்பை அழுத்தவும்.
iii. உங்களுக்கு சிடிஎஸ்எல் தனியாக மின்னஞ்சல் / அஞ்சல் மூலம் அனுப்பி உள்ள பயனாளி பெயரை (USER ID) உள்ளிடவும்.
iv. இப்போது திரையில் தெரியும் படம் எண்ணை அதற்குரிய இடத்தில் சரியாக உள்ளிடவும்.
v. அதன்பின்னர் தனி அஞ்சல் அல்லது மின்னஞ்சலில் வந்த கடவுச் சொல்லை உள்ளிடவும்.
vi. மேற்கண்ட தகவல்களை சரியாக நிரப்பியபின் இப்போது வலைதளத்தினுள் நுழைய LOGIN என குறிப்பிட்டுள்ளதை அழுத்தவும்.
vii. இப்போது எந்தத் தீர்மானத்திற்கு வாக்களிக்க விரும்புகிறீர்களோ, அதற்கு ஏற்ப EVSN ❮Association Name❯ ஐ அழுத்தவும்.
viii. இப்போது வாக்களிக்க வேண்டிய பக்கத்தில் தீர்மானம் என்ன என்பது குறித்த தகவல் இடம்பெறும். நீங்கள் வாக்களிக்க உதவும் வகையில் அதற்கு எதிராக YES / NO அதாவது 'ஆம் / இல்லை' என்ற பொருளில் இரு வாய்ப்புகள் தரப்பட்டிருக்கும். அதில் உங்களுக்கு ஏற்றதை தேர்ந்தெடுங்கள். YESஐ தேர்வு செய்தால், தீர்மானத்துக்கு இசைவு தெரிவிப்பதாகப் பொருள். NOஐத் தேர்வு செய்தால், தீர்மானத்தை எதிர்ப்பதாக ஆகும்.
ix. தீர்மானத்தின் முழு விவரங்களைப் பார்த்தறிய RESOLUTION FILE LINK எனக் குறிப்பிட்டுள்ளதை அழுத்தவும்.
x. நீங்கள் வாக்களிக்கும் முடிவின்படி, ஏதேனும் ஒரு வாய்ப்பை தேர்ந்தெடுத்த பிறகு SUBMIT என்பதை அழுத்தவும். நீங்கள் வாக்களித்துவிட்டதை உறுதி செய்ய மற்றொரு ஒப்புதல் பெட்டி தோன்றும். அதில் இடம்பெறும் OK என்பதை அழுத்தவும். ஏற்கனவே செய்த தேர்வை மாற்ற விரும்பினால், CANCEL என்பதை அழுத்தி தேவையான மாற்றங்களைச் செய்யலாம்.
xi. தீர்மானங்கள் குறித்து வாக்களிப்பதை CONFIRM என்பதை அழுத்தி ஒருமுறை உறுதி செய்துவிட்டால் பின்னர் அதை மாற்ற இயலாது.
xii. நீங்கள் வாக்களித்ததை உறுதி செய்ய நினைத்தால், அதின் அச்சைபெற வாக்களிக்கும் பக்கத்தில் உள்ள Click here to Print என்பதைப் பயன்படுத்தவும்.
xiii. மின்னணு வாக்குப் பதிவில் ஏதேனும் பிரச்சனையோ, சந்தேகமோ இருந்தால் shareholders@tmbank.in அல்லது helpdesk.evoting@cdslindia.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுதவும்.

B : **ஆண்டுபொதுக் கூட்டத்தில் பங்கேற்க விரும்பும் உறுப்பினர் தனக்கான பயனாளி பெயர் மற்றும் கடவுச் சொல்லை அச்சிட்ட நகலாகப் பெற்றிருந்தால் (தங்களது மின்னஞ்சல் முகவரியை வங்கியிடம் பதிவு செய்யாத உறுப்பினர்களுக்கு அல்லது அதை ஆவணமாகப் பெற விரும்பியவர்களுக்கு...)**

i. ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பங்கேற்கத் தேவையான பயனாளி பெயர் மற்றும் கடவு சொல்லை சிடிஎஸ்எல்லிடமிருந்து பாதுகாப்பாக அச்சிட்ட ஆவணமாக பதிவுத் தபாலில் பெற்றிருந்தால்:
அதில் EVSN (e-Voting sequence Number). USER ID, மற்றும் PASSWORD போன்றவை இருக்கும்.
ii. மேலே இடம் பெற்றிருப்பதில் வ.எண் (i) முதல் வ.எண் (xiii) வரையுள்ள அனைத்தையும் அப்படியே பின்பற்றி வாக்களிக்கவும்.

C : **காணொளிக் காட்சி உள்ளிட்ட பிற வகையில் ஆண்டு பொதுக் கூட்டத்தில் பங்கேற்கும் பங்குதாரர்களுக்கான வழிகாட்டுமுறைகள்:**

1. ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் காணொளிக் காட்சி உள்ளிட்ட பிற வகையில் பங்கேற்க சிடிஎஸ்எல்லின் மின்னணு வாக்குப்பதிவு முறையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இதற்கு அவர்கள் https://www.evotingindia.com என்ற வலைதளப் பக்கத்தில் நுழைய வேண்டும். தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு முறையில் வாக்களிக்க சிடிஎஸ்எஸ் அனுப்பிய ரகசிய குறியீடுகளையே இதற்கும் பயன்படுத்தலாம். மேலும், காணொலி காட்சியாக நேரலையில் நடைபெறும் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பங்கேற்கத் தரப்பட்டிருக்கும் இணைப்பு வழியே பங்குதாரர் / உறுப்பினர்கள் (LOGIN PAGE) வழியே நுழைந்தால் அங்கே நிறுவனத்தின் மின்னணு வாக்குப்பதிவு வரிசை எண் (Electronic Voting Sequence Number - EVSN) இடம்பெற்றிருக்கும்.

2. பங்குதாரர்கள் இந்த இணையக் கூட்டத்தில் கலந்துகொள்ள தங்களது வீட்டுக் கணினி, மடிக்கணினி, ஐபேட் அல்லது கைப்பேசி என எதை வேண்டுமானாலும் பயன்படுத்தலாம்.

3. மேலும் தடங்கல் இல்லாமல் இந்த கூட்டத்தில் பங்கேற்க விரும்பும் பங்குதாரர்கள் நல்ல வேகமுள்ள இணைய இணைப்பைப் பயன்படுத்துவதோடு, கணினியின் கேமராவையும் பயன்படுத்த ஆலோசனை வழங்கப்படுகிறது

4.இந்த பொதுக் கூட்டத்தில் பங்கேற்பதோடு, தனது கருத்துகளைச் சொல்லவும், கேள்வி கேட்கவும் விரும்பும் பங்குதாரர்கள் இதற்கு முன்னதாகவே தங்களை பதிவு செய்து கொள்ள வேண்டும். இதற்கு பெயர், டிமேட் கணக்கு எண் / போலியோ எண், இமெயில் முகவரி, கைப்பேசி எண் போன்ற தகவல்களை, **கூட்டம் நடக்க உள்ள தினத்திற்கு 7 நாட்கள் முன்னதாக** shareholders@tmbank.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும். ஆண்டு பொதுக் கூட்டத்தின்போது கேள்விகளை மட்டும் எழுப்பி தகவல்பெற விரும்பும் பங்குதாரர்கள் அந்தக் கேள்விகளுடன் மேற்கூறிய தகவல்களுடன் அதே முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம். உங்களது கேள்விகளுக்கு வங்கி தக்கவகையில் மின்னஞ்சல் மூலம் பதில் அளிக்கும்.

5. ஏற்கனவே கேள்வி கேட்க விரும்பும் பங்குதாரர்களாக முன்பதிவு செய்துள்ள பங்குதாரர்கள் மட்டுமே ஆண்டுப் பொதுக் கூட்டத்தின்போது கருத்து சொல்லவோ, கேள்வி கேட்கவோ அனுமதிக்கப்படுவார் கள். அதுவும் முதலில் வந்தவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில்தான் வாய்ப்பளிக்கப்படும். இருக்கும் கால அளவைப் பொறுத்து, சுமூகமாக கூட்டத்தை நடத்தும் வகையில் எத்தனை பேரை பேசவும், கேள்வி கேட்கவும் அனுமதிப்பது என்பதில் கூட்டத்தின் தலைவர் எடுக்கும் முடிவே இறுதியானது.

D : ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பங்கேற்று மின்னணு முறையில் வாக்களிக்க விரும்பும் பங்குதாரர்களுக்கான வழிகாட்டுமுறைகள்:

1. ஆண்டுப் பொதுக்கூட்ட நாளில், அதில் பங்கேற்பதுடன், அன்றே மின்னணு முறையில் வாக்களிப்பதற்கான நடைமுறையும், ஏற்கனவே சொல்லப்பட்ட தொலை தூர மின்னணு வாக்குப்புதிவு முறையும் ஒன்றே.

2. காணொளி காட்சி உள்ளிட்ட பிற வகையில் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பங்கேற்கும் பங்குதாரர்கள், ஏற்கனவே தரப்பட்ட வாய்ப்பான தொலை தூர மின்னணு வாக்கெடுப்பில் பங்கேற்காமல் இருந்தால், அவ்வாறு பங்கேற்க தடை ஏதுவும் விதிக்கப்படாமல் இருந்தால் மட்டுமே ஆண்டுப் பொதுக் கூட்டத்தின்போது நடைபெறும் மின்னணு வாக்குப் பதிவில் பங்கேற்க அனுமதிக்கப்படுவார்கள்.

3. தொலை தூர மின்னணு வாக்குப்பதிவு (Remote e-voting) முறையில் ஏற்கனவே வாக்களித்த ஒருவர் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பங்கேற்க அனுமதிக்கப்படுவார். ஆனால், கூட்டத்தின்போது நடைபெறும் வாக்கெடுப்பில் பங்கேற்க அனுமதிக்கப்படமாட்டார்.

23. பங்குதாரர்களுக்கான பொதுவான வழிகாட்டு நெறிமுறைகள்

a) நிறுவனப் பங்குதாரர்களைப் பொறுத்தவரை (தனிநபர், இந்து கூட்டுக் குடும்பம் மற்றும் வெளிநாடுவாழ் இந்தியர் போன்றவர்களைத் தவிர்த்த மற்றவர்கள்) அவர்களது நிர்வாகக் குழுவில் தீர்மானம் இயற்றி எந்த தனிநபருக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்கியிருக்கிறார்களோ, அவரது மாதிரி கையொப்பத்துடன் தீர்மான நகலின் பிரதியெடுத்த நகலை (PDF அல்லது JPG வடிவில்) மின்னஞ்சல் மூலம் shareholders@tmbank.in முகவரிக்கும், அதன் மற்றொரு நகலை helpdesk.evoting@ cdslindia.com என்ற முகவரிக்கும் அனுப்ப வேண்டும்.

b) தங்களது மின்னஞ்சல் முகவரியை வங்கியிடமோ, தங்களது டிபியிடமோ ஏற்கனவே பதிவு செய்யாத ஒரு உறுப்பினர் கூட்டம் நடைபெறுவதற்கு 7 நாட்கள் முன்னதாக தனக்கு ஆண்டுப் பொதுக் கூட்டஅறிவிப்பு, ஆண்டறிக்கை, மற்றும் தனக்கான பயளாளி பெயர் மற்றும் கடவுச் சொல்லை பெற விரும்பினால், அதற்கு உதவும் வகையில் கீழ்கண்ட முறையைப் பின்பற்றி தனது மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்து கொள்ளலாம்.

i. இவ்வங்கியின் பங்குகளை பத்திரங்களாக, காகித வடிவச் சான்றிதழாக வைத்திருக்கும் உறுப்பினர்கள், அதன் ஸ்கேன் செய்யப்பட்ட நகலுடன், கையொப்பமிட்ட கடிதம் ஒன்றில் போலியோ எண், முழு முகவரி, மின்னஞ்சல் முகவரி போன்ற தகவலுடன், சுய சான்றளித்த ஆளறி ஆவணம் மற்றும் வீட்டு முகவரிக்கான ஆவணங்களின் பிரதியையும் சேர்த்து மின்னஞ்சல் மூலம் shareholders@tmbank.in என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

ii. இவ்வங்கிப் பங்குகளை டிமேட் வடிவில் வைத்திருப்பவர்கள் தங்களது டிபாசிட்டரி பங்கேற்பாளர் (டிபி / DP) - ஐத் தொடர்பு கொண்டு, அவர்களிடம் மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்யக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

c) ஏற்கனவே சிடிஎஸ்எல் அனுப்பிவைத்த பயனாளி பெயர் மற்றும் கடவுச்சொல்லை தவறவிட்டவர்கள், மீண்டும் தற்போது அதைப் பெற விரும்பினால், அவர்கள் shareholderstmbank.in என்ற மின்னஞ்சல் முகவரியில் வங்கியைத் தொடர்பு கொண்டு அதைக் கேட்டுப் பெறலாம். அல்லது, கீழ்கண்ட முகவரியில் வங்கிக்கு கோரிக்கை அனுப்பலாம்.
தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிமிடெட், செக்கரேட்டேரியல் டிப்பார்ட்மெண்ட், 57, வி. இ. சாலை, தூத்துக்குடி - 628 002.
மேலே சொன்ன மின்னஞ்சல் மற்றும் கடிதம் குறிப்பிட்ட முகவரிக்கு ஆண்டுப் பொதுக் கூட்டம் நடைபெறுவதற்கு 7 நாட்கள் முன்னதாக கிடைக்கும்படி அனுப்பப்பட வேண்டும்.

d) ஆண்டுப் பொதுக் கூட்டம் தொடர்பாக, உறுப்பினர் / பங்குதாரர் என்ற வகையில் உங்களுக்கு அனுப்பப்படும் கடவுச்சொல்லை கட்டாயமாக மற்றவர்களுடன் பகிர வேண்டாம் எனவும் ரகசியமாக பாதுகாக்கவும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளப்படுகிறது. மின்னணு வாக்களிக்க வலைதளத்தில் நுழைய முயல்கையில் ஒருவேளை தொடர்ந்து ஐந்து முறை தவறான கடவுசொல்லை உள்ளிட்டால், 5வது முறைக்குப் பிறகு இணைப்பு துண்டிக்கப்பட்டுவிடும். இதுபோன்ற நேரங்களில், மீண்டும் புதிய கடவுச் சொல்லை உருவாக்க www.evotingindia.com என்ற வலைதளத்தில் உள்ள வாய்ப்பை (Forgot Password) பயன்படுத்தலாம். இதற்கு உங்களைப் பற்றி கேட்கப்படும் பல்வேறு தகவல்களை பதிவிட வேண்டியது வரும்.

e) ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பங்கேற்பது, மின்னணு வாக்குப்பதிவு முறையில் பங்கேற்பது போன்றவை குறித்து கேள்விகளோ, பிரச்சனைகளோ இருந்தால், நீங்கள் அடிக்கடிக் கேட்கப்படும் கேள்விகள் (FAQs) பகுதிக்குச் சென்று தேவையான தகவலை பெறலாம். மேலும், www.evotingindia.com என்ற முகவரியில் உள்ள மின்னணு வாக்குப் பதிவு முறை குறித்த தகவலறிக்கையில் உதவிக்கான பகுதியைப் பார்க்கவும். அல்லது helpdesk.evoting@cdslindia.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும் அல்லது கீழ்கண்ட மூன்று தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு தேவையான தகவலை பெறலாம். 1. திரு. நிதின் குந்தர் (022-23058738), 2. திரு. மெஹ்பூப் லக்கானி (022-23058543), 3. திரு. ராகேஷ் தல்வி (022-23058542)

f) மின்னணு வாக்குப்பதிவு தொடர்பான எல்லா பிரச்சனைகளுக்கும் அஞ்சல் மூலமாக தீர்வுபெற Mr. Rakesh Dalvi, Manager, (CDSL) Central Depository Services (India) Limited, A Wing, 25th Floor, Marathon Futurex, Mafatlal Mill Compounds, N M Joshi Marg, Lower Parel (East), Mumbai – 400013 என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும். மின்னஞ்சல் மூலம் தீர்வுபெற helpdesk.evoting@cdslindia.com என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும் அல்லது 022-23058542/43 என்ற இரு எண்களில் தொடர்பு கொள்ளவும்.

தூத்துக்குடி,
செப்டம்பர் 24, 2020

மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் ஆணைப்படி
தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கிக்காக

நீதியரசர் திரு. ஆர் பாலசுப்ரமணியன்
முன்னாள் நீதிபதி, மெட்ராஸ் உயர்நீதிமன்றம்,
கூட்டத்திற்கான தலைவர்